**தலைப்பு 417 – தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் இராஜாங்க அமைச்சு அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 19,508,026 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் கொள்வனவுகளாக குறிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 4,012,887 ஆகும். எனவே, ரூபா 15,495,139 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சொத்து சுவீகரிப்பாகக் காட்டப்பட்ட பெறுமதி ரூபா 4,012,887 ஆனது 2102 மற்றும் 2103 இல் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் ஆகும், இது சொத்துக்களை சுவீகரிப்பதற்கான செலவின வாக்குப்பணமாகும். இதற்கு மேலதிகமாக ஏனைய செலவின வாக்குப்பணம் மூலம் செலவினங்கள் ஏற்பட்டுள்ளன, ஆனால் அவை நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்படாததற்குக் காரணம், ஏனைய செலவின வாக்குப்பணம் மூலம் மேற்கொள்ளப்பட்ட சொத்து சுவீகரிப்பிற்காக சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் பொருளிருப்பை எடுப்பதற்கான வசதி இல்லாததே ஆகும். | நிதிக்கூற்றுக்களில் தகவல் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

#### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001, 2002, 2003 மற்றும் 2401 செலவின வாக்குப்பணங்கள் தொடர்பான சம்பளம் மற்றும் கூலிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் மீதான ரூபா 11,667,144 தொகையானது செயற்பாட்டு | 2021 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களம் நடாத்திய மாநாட்டில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் அந்தத் திணைக்களத்தின் | நிதிக்கூற்றுக்களில் தகவல் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் இது நிர்மாணத்தின் கீழ் உள்ள முதலீட்டு நடவடிக்கைகளில் அல்லது பௌதீக சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளைப் பெறுதல் ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் அவர்கள் வழங்கிய மாதிரி படிவம் தொடர்பாக, இந்த செலவினத் தலைப்புக்களின் பெறுமதி பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீட்டு சுவீகரிப்புக்களின் கீழ் உள்ளது. | |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் உள்ளடக்கப்பட்டுள்ள சேதங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பேணப்படும். |
| (ஆ) | நிதிப்பிரமாணங்கள் 1645(அ) மற்றும் 1647(அ) இன் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பேணப்படவில்லை. | 01 வான், 02 டபிள் கெப் வண்டிகள் மற்றும் ஒரு கார் ஆகியவை செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் தங்களுக்கு முன்வைக்கப்பட்ட தகவல் அறிக்கையில் பிழை காரணமாக அந்த 04 வாகனங்கள் பற்றிய தகவல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த 04 வாகனங்களும் செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் கையகப்படுத்தப்பட்டிருப்பதால், அமைச்சு சம்பவக் குறிப்பு புத்தகங்களை பேணுவதில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். | பிரமாணங்களின் பிரகாரம் ஒவ்வொரு வாகனம் தொடர்பாகவும் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு வைத்திருக்கப்பட வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வழிகாட்டி இலக்கம் 7.2 இன் கீழ் புதிய வாழ்க்கை தோட்ட வீடமைப்புத் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் | இணங்கப்பட்டது. வீடமைப்பு செயற்திட்டங்களுக்கு பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டதற்கான எழுத்துமூல சான்றாதாரங்களை சம்பந்தப்பட்ட விடய | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் உடனடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| தோட்ட வீடமைப்பு கூட்டுறவுச் சங்கத்தின் பங்குபற்றலுடன் கூடிய குழுவொன்று 07 நிபந்தனைகளின் அடிப்படையில் அதைச் செய்ய வேண்டும், ஆனால் அத்தகைய குழு பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. கௌரவிலா ஹவுஸ் ஏ மற்றும் பீ செயற்திட்டம் மற்றும் கெக்லியா தோட்ட வீடமைப்பு செயற்திட்டத்திற்காக பயனாளிகள் விண்ணப்பங்களை சமர்ப்பித்து கோரியதாகவும் அவர்களை தெரிவு செய்வதில் சரியான நடைமுறைகளை பின்பற்றியதாகவும் நியாயமான முறையில் உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் காணப்படவில்லை. பயனாளிகளின் சரியான தெரிவை அமைச்சு கண்காணிக்கவில்லை. இது தொடர்பாக கணக்காய்விற்கு பயனாளிகள் பட்டியலைத் தவிர எழுத்துமூல சான்றாதாரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | உத்தியோகத்தர்கள் கோவைப்படுத்தியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான தகவல்களைக் கோரி தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு நான் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன், மேலும் அது தொடர்பான தகவல்களைப் பெற்ற பின்னர் உங்களுக்கு அறிவிப்பேன் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் அமைச்சு நேரடியாகத் தலையிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு மீண்டெழும் செலவின விடயங்களிற்கான ரூபா 600,000 தொகை, இரண்டு மூலதனச் செலவின விடயங்களிற்கான ரூபா 3,200,000 தொகை மற்றும் உப செயற்திட்டத்திற்கான ரூபா 199,000,000 தொகையான ஒதுக்கீடு செலவிடப்படாததால் மீளாய்வாண்டில் முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டது. | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணங்களுக்கான கட்டுப்பாடுகள் காரணமாக, ஆண்டு இறுதிக்குள் உரிய அங்கீகாரங்களை பெற முடியாமல் போனது, கொவிட் சூழ்நிலை காரணமாக வீட்டிலிருந்தே வேலை செய்தல், புதிய பணியாளர்கள் இடைநிறுத்தம் மற்றும் நிதி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் புதிய மூலதன கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாதமை என்பன காரணமாக ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 26,306,758.40 தொகையான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் (குறிப்பு iii) கீழ் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | பொறுப்புக்கள் பதிவேட்டில் சில கணக்குகள் இரண்டு முறை பதிவுசெய்யப்பட்டதுடன் சில கணக்கு கொடுப்பனவுகள் தவறுதலாக பதிவுசெய்யப்பட்டது. அந்த பெறுமதிகள் நீக்கப்பட்டு, நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில் குறிப்பொன்றையும் செய்துள்ளேன். | மீளாய்வாண்டுக்குரிய அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் கூற்றில் சரியாக பதிவுசெய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 5,895,188 பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் பதிவேட்டிலும், நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றிலும் (குறிப்பு iii) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக் கூற்றை தயாரிக்கும் போது, திசெம்பர் 31 வரை இருக்கும் ஒதுக்கீட்டு வரம்பு மாத்திரமே சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளிடப்பட முடியும், ஆனால் திசெம்பர் 31 இல் அந்தத் தொகைக்கு மேலதிகமாக உறுதிச்சீட்டுக்கள் கிடைக்கின்றன. நி.பி. 115 இன் கீழ் பெறப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் தொடர்ந்துவரும் ஆண்டில் தொகை செலுத்தப்படுவதால் இந்த நிலைமை ஏற்படுகிறது. | மீளாய்வாண்டுக்குரிய அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் கூற்றில் சரியாக பதிவுசெய்யப்பட வேண்டும். |
| (இ) | பதின்நான்கு செலவின வாக்குப்பணங்களுக்கான ஒதுக்கீட்டை விஞ்சி சம்பந்தப்பட்ட செலவின வாக்குப்பணங்களின் மீதியைக் கவனிக்காமல், ரூபா 4,3,67,281 கடன்களிற்காக செலுத்தப்பட்டுள்ளன. | -மேற்படி- | மாற்று ஆண்டு தொடர்பான பொறுப்புக்கள் தொடர்பாக கடப்பாடுகளை மேற்கொள்ளும் போது, தொடர்புடைய செலவின வாக்குப்பணங்களின் மீதி தொடர்பாக கவனமாக இருக்க வேண்டும். |

**2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சனவரி 26 இல் அமைச்சின் செயலாளருக்கு ரூபா 50,000 வழங்கப்பட்ட போதிலும் அந்த முற்பணம் 2021 ஒக்தோபர் 22 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டதுடன் முற்பணத்தை தீர்ப்பனவு செய்வதில் ஏற்பட்ட தாமதம் 268 நாட்கள் ஆகும். | இந் நிலைமைகள் தற்போது சீர்செய்யப்பட்டுள்ளன, மேலும் இந்த ஆண்டு மற்றும் அதற்குப் பின்னர் அவை மீண்டும் நிகழாமல் இருப்பது உறுதிப்படுத்தப்படும். | நி.பி. 371(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒரு உத்தியோகத்தரிற்கு ரூபா 25,000 முற்பணம் 2021 யூன் 14 இல் வழங்கப்பட்டது, ஆனால் அந்த முற்பணம் 2021 ஒக்தோபர் 12 இல் செலுத்தப்பட்டதால் 119 நாட்கள் தாமதமாக முற்பணம் செலுத்தப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2021 மார்ச் 08 இல் ரூபா 100,000 வழங்கப்பட்டு, உரிய முற்பணம் 2021 நவம்பர் 15 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டது, எனவே முற்பணம் 251 நாட்கள் தாமதமாக செலுத்தப்பட்டது. முற்பணம் வழங்கப்பட்டு அனுமதி வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் மற்றொரு நேர்காணலுக்கு ரூபா 75,000 முற்பணம் 2021 மார்ச் 17 இல் வழங்கப்பட்டதுடன் 2021 நவம்பர் 15, வரை அந்த முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை, எனவே முற்பணம் 243 நாட்கள் தாமதமாக தீர்ப்பனவு செய்யப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 2021 நவம்பர் 01 இல் தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பின் பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 300,000 முற்பணமொன்று வழங்கப்பட்டு, அந்த முற்பணம் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் 2021 நவம்பர் 01 இல் ரூபா 122,463 முற்பணம் மீண்டும் வழங்கப்பட்டது. மேலும், தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக இயங்குவதால், அமைச்சுக்கு வெளியே உள்ள ஒரு அமைப்பின் அதிகாரிகளுக்கு முற்பணத்தை விடுவிப்பது கேள்விக்குறியாக இருந்தது. | இந்த நிறுவனம் எமது அமைச்சின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதால் இந்திய வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பண பீ கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வுபெற்ற மூன்று ஊழியர்களிடமிருந்து ரூபா 447,908 தொகையை அறவீடு செய்வதற்கு 1 முதல் 4 ஆண்டுகளுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திரு. கே. துரைசாமியின் நிலுவை இடர் கடன் மீதி ரூபா 123,376 2022.04.04 இல் செலுத்தப்பட்டுள்ளது.திரு. கே. விஜயராஜ் அவர்கள் நிலுவையாக உள்ள இடர்கடன் மீதி ரூபா 201,436 ஐ மாதாந்தம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளார். | உரிய நிலுவை கடன் மீதிகளை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 (3). | 6000-0-0-16-0-82 என்ற இலக்கத்தை கொண்ட வைப்பு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 80,554,639 பெறுமதி தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 23 சந்தர்ப்பங்கள் 04.2022 இல் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ரூபா 9,267,738 கொடுப்பனவிற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபா 65,780,544 தொகை பொது வைப்புக் கணக்கிலிருந்து உடனடியாக நீக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 702 | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு (PHDT) நிர்மாண ஒப்பந்தங்களை வழங்கும் போது அமைச்சு நிதிப்பிரமாணங்களை பின்பற்றியிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. 2020.08.09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு அமைச்சின் கீழ் ஒரு | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிறுவனமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் ஒப்பந்தங்களை கைச்சாத்திடாமல் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு பணி ஆணைகளை அமைச்சு வழங்கும். எதிர்காலத்தில் இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட உள்ளது. | |
| (இ) | நிதிப்பிரமாணம் 702(3) | அமைச்சினால் கைச்சாத்திடப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களினதும் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட உள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | 2018 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 2/2018 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி மற்றும் 6 ஆம் பந்தி | 2021 திசெம்பர் 31 வரை சுழற்சி நிதி உட்பட 13 நிதிகளை மூடுவதற்கும், சுழற்சி நிதிக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,480,000 கடனை அறவீடு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. | 2/2018 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சுழற்சி நிதியை மூடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல் 8.12.1 (அ), (ஆ) மற்றும் (இ) | தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் ஒப்பந்தக் கண்காணிப்புக்கு மேலதிகமாக, பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு (PHDT) ஒப்பந்ததாரர்களைத் தெரிவு செய்தல் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. 2020.08.09 ஆம் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு அமைச்சின் கீழ் ஒரு நிறுவனமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அமைச்சின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான நிர்மாண ஒப்பந்தங்கள் | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு வழங்கப்படும். அதன் பிரகாரம் செயற்திட்டப் பணிகளின் கட்டங்களில் பூர்த்தி செய்யப்பட்ட பணியின் பெறுமதியின் பிரகாரம் விலைப்பட்டியல்கள் சார்ப்பிக்கப்பட்ட பின்னர் பொறியியல் துறையின் பரிந்துரைகளின் அடிப்படையில் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாடுகளை நிறைவேற்ற தவறியமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய வாழ்வு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் முன்னைய ஆண்டில் இருந்து 1010 வீடுகளின் பணிகளை நிறைவு செய்யும் நடவடிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அதற்காக ரூபா 158 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் அந்த வீடுகள் எதுவும் நிர்மாணிக்கப்படவில்லை. | இணங்கப்பட்டது. 2015-2019 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களுக்கு மேலதிக ஒதுக்கீடுகள் கிடைக்காமல் நிலுவையாக உள்ளதால் மேற்படி செயற்திட்டங்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டதால், இந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் தோல்வியடைந்தன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பெருந்தோட்ட சமூகத்தில் சமூகத் தலைமைத்துவம் மற்றும் சமூகப் பங்கேற்பு அபிவிருத்திக்கு முன்னணி வகிக்கும் ஜன முலா மண்டலங்கள் மற்றும் ஜன முலா நிலையங்களை அமைப்பதற்காக கிராமப்புறங்களில் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டம் 3.2 இன் கீழ் 25 | அமைச்சின் முக்கிய பணியாக அடையாளம் காணப்பட்ட இந்த நிலையங்களை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படாததால், செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது, கடந்த காலாண்டில் அந்த பணி சேர்க்கப்பட்டது. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| நிலையங்களை ஸ்தாபிப்பதற்காக ரூபா 500,000 தொகை ஒதுக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் பௌதீக முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. | ஜன முலா ஜன மண்டலம் அமைப்பது ஒரு நீண்ட கால நிகழ்ச்சித்திட்டம் என்பதால், அது தொடங்கப்பட்ட ஆண்டில் அதன் பௌதீக முன்னேற்றம் 5% எனக் குறிப்பிடப்பட வேண்டியதுடன் தாமதமான பிழை காரணமாக பௌதீக முன்னேற்றம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிதி முன்னேற்றம் மாத்திரமே சேர்க்கப்பட்டுள்ளது. | |

**3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் பெறப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 03 நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 11 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 10 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 1.7 சதவீதத்திற்கும் 69 சதவீதத்திற்கு இடையில் காணப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | செயலாற்றல் அறிக்கையில், பின்தங்கிய பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 08 செயற்திட்டங்களுக்கு ரூபா 558.24 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், உண்மையான கிரயம் ரூபா 295.12 மில்லியனாக இருந்த போதிலும் 05 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 6.8 சதவீதம் மூதல் 83 சதவீதம் வரையான மட்டத்தில் இருந்தது. | உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் ஒவ்வொரு செயற்திட்டப் பணிகள் தொடர்பான நிதி முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் தனித்தனியாக சேர்க்கப்படவில்லை. ஒரு புறக்கணிப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 2021 ஆம் ஆண்டு செயலாற்றல் அறிக்கையில் இது சீர்செய்யப்படும். | -மேற்படி- |
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் உண்மையான செலவினம் ரூபா 62.42 மில்லியன் ஆகும். ஆனால் | சமூக விழிப்புணர்வு மற்றும் திறன் பயன்பாட்டு செயற்திட்டங்களின் கீழ் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 3.1 மற்றும் 3.2 இன் பிரகாரம் அமைச்சினால் வலயம் 7 இன் பிராந்திய செயலகங்களுக்கு | -மேற்படி- |

| | |
|---|---|
| உப செயற்திட்டங்களுக்கான நிறுவப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதில் பௌதீக முன்னேற்றம் பூச்சியத்திலிருந்து 89 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. மேலும், சமூக விழிப்புணர்வு மற்றும் திறன் பயன்பாட்டு செயற்திட்டத்தின் கீழ், 7 பிராந்தியங்கள் அனைத்திலும் தேவைகளை கண்டறியும் ஆய்வுகளை நடத்துவதை நோக்கமாகக் கொண்டது, ஆனால் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | நியமிக்கப்பட்டுள்ள PCCF (பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பவர்) உத்தியோகத்தர்கள் அந்த பகுதிகளில் பெருந்தோட்ட சமூகத்தின் தேவைகள் குறித்த ஆய்வு அறிக்கைகளைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். |

### 3.3 எதிர்பார்த்த விளைவு பெறப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் தொடக்கத்தில், தோட்ட சமூகத்தினருக்கு 742 வீட்டு அலகுகளை வழங்குவதற்கான இலக்கிற்காக பணியாற்றப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதியளவில் 19 வீட்டு அலகுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், எந்தவொரு வீட்டு அலகும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இச் செயற்திட்டத்தின் கீழ் 350 வீடுகளில் 283 வீடுகளின் பணிகள், அதாவது எதிர்பார்த்த இலக்கில் 81 சதவீதமானவை, ஆண்டின் இறுதியளவிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. பெருந்தோட்டக் கம்பனிகளிடம் இருந்து காணிகள் விடுவிக்கப்பட்டு NBRO அறிக்கைகள் பெறப்பட்டு உரிய பெருந்தோட்டக் கம்பனிகளால் காணி சுத்திகரிக்கப்பட்டதன் பின்னர் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும். அன்றைய காலகட்டத்தில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் கட்டுமான மூலப்பொருட்களின் விலையில் ஏற்பட்ட துரித அதிகரிப்பு மற்றும் மூலப்பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக, செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் தோல்வியடைந்துள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது தொடர்பான செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். | உரிய செயற்திட்டங்களை அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் அமைச்சினால் வருடாந்தம் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக பெருந்தோட்ட சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முன்னேற்றத்தை பரீட்சித்த போது முறையான சுகாதார வசதிகள் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை 7 பிராந்தியங்களில் உள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 19.7 சதவீதமாகும். | இணங்கப்பட்டது. சுகாதார வசதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சினால் பெறப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்றன என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | -மேற்படி- |

**3.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பசுமைத் தங்க வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடைபெற்று வந்த 1026 வீட்டு அலகுகளின் நிர்மாணப் பணிகள் 2020 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டன. 482 வீட்டு அலகுகளின் தொடக்க கிரயத்திற்காக ரூபா 67,120,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது. 2022 மார்ச் 31 ஆம் திகதிய SMEHCI/05/14/GA/2021/09 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இந்தப் பணம் அறவிடப்பட்டிருந்தது என கூறப்பட்டது, ஆனால் அது பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், தற்போதுள்ள வீடமைப்பு செயற்திட்டங்களில் பௌதீக முன்னேற்றம் அடைந்துகொள்ளப்படாமல், புதிய செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டதால், அரசாங்க நிதி வினைத்திறனாகப் பயன்படுத்தப்படவில்லை. | இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 58,580,000.00 தொகை புதிய செயற்திட்டங்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடுசெய்யப்பட்டு மீதமுள்ள ரூபா 8,540,000.00 தொகையை அறவிடுவதற்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | உரிய செயற்திட்டங்களை அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 02 கூட்டுப் பண்ணை நிர்மாண செயற்திட்டங்கள் 2021 மார்ச் 04 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 7,675,704 மதிப்பிடப்பட்ட செலவின தொகையுடன் 61 சதவீதமான நிதி முன்னேற்றம் மாத்திரமே அடைந்து கொள்ளப்பட்டுள்ளது. டயகம பொலித்தீன் தொடர்பான பயிர்ச்செய்கை செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், பயனாளிகள் செயற்திட்டத்தைப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். | STMF (சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்) 2021 நவம்பர் 23 ஆம் திகதிய கடிதம் மூலம் மற்ற செயற்திட்டமான வடகொட பொலித்தீன் தொடர்பான பயிரிடல் செயற்திட்டம் 2021 நவம்பர் 23 முதல் இடைநிறுத்தப்படும் என செயற்திட்ட கம்பனிக்கு அறிவித்துள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | செயற்திட்டங்கள் உரிய கால எல்லைக்குள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில், 06 வலயங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 15 செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் இவ்வருட இறுதிவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் மதிப்பிடப்பட்ட தொகையில் ரூபா 169,091,715 மாத்திரம் செலவிடப்பட்டது. | இணங்கப்பட்டள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான கொரோனா தொற்று நிலைமை காரணமாக தோட்ட கம்பனிகளிடமிருந்து காணிகளை விடுவிப்பது மற்றும் NBRO அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பன கடினமாக இருந்தது. இதனால், அடிப்படை செயற்பாடுகளை எதிர்பார்த்தவாறு பூர்த்தி செய்ய முடியாமல் தடைப்பட்டது. மேலும், கட்டிட மூலப்பொருட்களின் துரித விலையேற்றம் மற்றும் மூலப்பொருட்கள் தட்டுப்பாடு போன்ற காரணங்களால், செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் தாமதமாகி வருவதால், செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் தோல்வியடைந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | செயற்திட்டங்கள் உரிய கால எல்லைக்குள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.6 நிதி விடுவிக்கப்பட்ட போதிலும் முன்னேற்றமடையாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலி, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய மூன்று பிராந்தியங்களிலுள்ள 08 தோட்டங்களில் வீடமைப்பு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மிளாய்வு நிதியாண்டில் ரூபா 40,300,000 அதாவது ரூபா 215,605,000 மதிப்பிடப்பட்ட தொகையில் 18.69 சதவீதம் செலவிடப்பட்ட போதிலும், காணி விடுவிப்பு பிரச்சினைகள் காரணமாக பௌதீக முன்னேற்றம் ஏற்படவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. இந்த வீடமைப்பு செயற்திட்டங்களுக்கான நிர்மாணப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | செயற்திட்டங்கள் உரிய கால எல்லைக்குள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **4000 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் - கட்டம் I மற்றும் II**<br>2021 ஆம் ஆண்டில் 424 வீட்டு அலகுகளின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்யும் இலக்கு நிறுவப்பட்ட போதிலும்மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 266 ஆகவே இருந்ததுடன் அதன் பௌதீக முன்னேற்றம் 62.8 சதவீத மட்டத்தில் இருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் மீளாய்வாண்டின் (2021) இறுதியளவில் 05 வருடங்களை கடந்திருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட வருமான மட்டம் 48.43 சதவீத குறைந்த மட்டத்தில் இருந்தது. | 4000 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் இதுவரை 3799 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 3328 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேலும் 470 வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்க தயாராகி வருகிறது. நாட்டில் நிலவும் கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை காரணமாக, இந்த வீடுகளின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. | வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட்டு உரிய காலத்திற்குள் பயனாளிகளிற்கு கையளிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **4000 வீடுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டம்** 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 4000 வீட்டு அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு கையளிக்கும் நோக்கத்தடன் வீடமைப்பு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டிற்காக 3301 வீட்டு அலகுகளிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு மாத்திரம் ரூபா 522.2 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், அதில் 1898 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 385 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. வேலை பூர்த்தி செய்யப்பட்டது. இச் செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 73.77 சதவீதமாக இருந்த போதிலும், அடைந்துகொள்ளப்பட்ட பௌதீக முன்னேற்றம் 57.49 சதவீதமாக குறைவாக இருந்தது. அத்துடன் உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்த 3799 வீடுகளில் தோட்ட சமூகத்தினருக்கு கையளிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1936 ஆகவும், எதிர்பார்த்த நலன்களை அடைந்துகொள்வதில் 50 சதவீதமான குறைவான முன்னேற்றம் காணப்பட்டது. | 4000 வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்புக்கான நிதியேற்பாடு 2021 மார்ச்சில் ஒதுக்கப்பட்டதுடன் 2021.10.04 இல் உள்ளவாறு முதலாம் கட்டத்தில் 1057 வீட்டு அலகுகளில் 701 வீடுகளும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2943 வீட்டு அலகுகளில் 1235 வீட்டு அலகுகளும் என 1936 வீட்டு அலகுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அவை வழங்கப்பட்டுள்ளன என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.<br><br>நாட்டில் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக வீடமைப்பு செயற்திட்டங்களின் பல அடிப்படைப் பணிகளை திட்டமிட்டவாறு பூர்த்தி செய்ய முடியவில்லை. அவற்றை பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.<br><br>தற்போது, 471 வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கத் தயாராக உள்ளன, மேலும் 154 வீடுகளின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, ஆனால் நாட்டின் கொவிட்-19 தொற்றுநொய் காரணமாக வீடமைப்பு செயற்திட்டங்களின் பல அடிப்படைப் பணிகளை திட்டமிட்டவாறு பூர்த்தி செய்ய முடியவில்லை. அவற்றை பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | -மேற்படி- |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்ட இச் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் முதல் பகுதியாக 5000 வீடுகளுக்கான முகாமைத்துவக் கட்டண கொடுப்பனவை அமைச்சரவை அங்கீகரித்திருந்தது. பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியன் செலுத்தப்பட்டு 2021 திசெம்பர் 31 | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான முகாமைத்துவக் கட்டணம் ரூபா 10 மில்லியன் செலுத்தப்பட்டு இன்னும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது இச் செயற்திட்டம் தொடர்பான சில செயற்திட்டங்களுக்கு NBRO அறிக்கைகள் பெறப்பட்டு, 3525 வீடுகளுக்கான காணி | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| அளவில் மூன்று ஆண்டுகள் கடந்த போதிலும் எந்த வீடுகளிலும் பணிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. 3525 வீடுகளுக்கான நிர்மாண இடங்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ளன. | அடையாளம் காணப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் நாட்டின் தற்போதைய பணவீக்கப் பொருளாதார நிலைமைகள் காரணமாக ஏற்பட்ட சிரமங்களினால் 4000 வீடுகளின் நிர்மாணப் பணிகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது.<br>இந்த கட்டத்தில் வீடுகளை நிர்மாணிக்கும் பணி தொடங்கியதும், செலுத்தப்பட்ட முகாமைத்துவக் கட்டணம் மேவுகை செய்யப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |

**3.8 உள்ளூர் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மவுண்ட் வெர்னன் தோட்டத்தின் நடுப்பகுதியில் உள்ள வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பாக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு அமைச்சினால் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை உறுதிச்சீட்டுக்களின் பிரகாரம் ரூபா 48,350,000 ஆகவும், காசோலைகளின் நிழற்பட பிரதிகளின் பிரகாரம் ரூபா 61,165,966 ஆகவும், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பால் கணக்காய்விற்காக வழங்கப்பட்ட கோவையின் பிரகாரம் ரூபா 45,729,751 ஆகவும் காணப்பட்டது. எனவே, அந்த பெறுமதிகளில் வேறுபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. | இந்த செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக செலுத்தப்பட்ட உண்மையானகிரயம் ரூபா 45,340,388.50 ஆகும். | செயற்திட்டம் தொடர்பான அனைத்து விபரங்களும் கோவையில் சரியாக உள்ளிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பசுமை வீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் 2017 பெப்ரவரி 21 ஆம் திகதிய AMA/17/0306/739/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் கீழும் இச் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்கான அனைத்து கிரயங்களையும் அமைச்சு தாங்கிக்கொள்ளும். ஒரு வீட்டின் ரூபா 1,000,000 பெறுமதியில் ரூபா 480,000 வழங்கப்படும். ரூபா 520,000 ஏனைய தொகை கடனாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இந்தக் கடன் தொகையை பயனாளிகளிடமிருந்து அறவீடு செய்வது தொடர்பாக அமைச்சுக்கும் பயனாளிகளுக்கும் இடையில் எவ்வித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. அமைச்சு ஒதுக்கீடுகள் மூலம் நிர்மாணிக்கப்படும் தோட்ட வீடுகள் கடன் அடிப்படையிலும், இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடமைப்பு செயற்திட்டங்கள் முழு மானிய அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் ஒரே தோட்டத்தில் செயற்படும் போது, பயனாளிகளிடமிருந்து கடனை அறவீடு செய்வது சவாலாகவே உள்ளது. கடனை அறவீடு செய்வது தொடர்பில் வீட்டு பயனாளிகளுக்கு தெரிவிப்பதற்கு, பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் உத்தியோகத்தர்களுக்கு கடனை அறவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வீடமைப்பு செயற்திட்டங்கள் தொடர்பான கடன் அறவீடு தொடர்பாக தகவல்களை உரிய தோட்ட கம்பனிகள் மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு என்பவற்றிற்கு கொண்டு வருமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | பயனாளிகளிடம் இருந்து கடன் தொகையை அறவீடு செய்வது தொடர்பாக அமைச்சு மற்றும் பயனாளிகளுக்கு இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |
| (இ) | அமைச்சரவை தீர்மானம் அல்லது வழிகாட்டல்கள் அல்லது பசுமை தங்க வீடமைப்பு செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அமைச்சிற்கு கடனைத் திருப்பிச் செலுத்துவது எந்தத் திகதியிலிருந்து தொடங்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. கடன் மற்றும் வட்டி அறவீடு தொடர்பான முறையான பதிவுகள் அமைச்சில் பேணப்படுவதில்லை, அதன் பிரகாரம் கடன் மற்றும் வட்டி அறவீடு முறையாக செய்யப்படவில்லை. | | கடன் மற்றும் வட்டி அறவீடு தொடர்பான முறையான பதிவுகள் அமைச்சில் பேணப்பட வேண்டியதுடன் கடன் மற்றும் வட்டி அதற்கேற்ப அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | இந்த செயற்திட்டங்களுக்கு, அரசாங்கத்தின் வருடாந்த பாதீட்டில் இருந்து நிதி ஒதுக்கப்பட்டு, ஒருங்கிணைந்த நிதியில் இருந்து செலவிடப்படுகின்றது, அதன் பிரகாரம் இந்த வீடுகளுக்கான கடனை பயனாளிகளிடம் இருந்து அறவிடுவது அமைச்சின் பொறுப்பாகும். | தொடர்புடைய தகவல்கள் பெறப்பட்டு வருகின்றன, மேலும் கடன் அறவீட்டை முறைமைப்படுத்துவதற்கு மேலதிக தகவல்களை கொண்டு வருமாறு குறிப்பொன்றை மேற்கொண்டுள்ளேன். | கடனை அறவீடு செய்வதற்கு அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இந்த வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பான உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் முடிவடைந்து 6 மாதங்களுக்குப் பின்னர் இடத்தை பரீட்சித்து பிடிபணத் தொகை விடுவிக்கப்பட | இச் செயற்திட்டம் தொடர்பாக கள ஆய்வு அறிக்கையில், பொறியியல் துறையின் பரிந்துரையின் பேரில், பிடிபணம் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் கள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் | வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பான உடன்படிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். ஆனால் அமைச்சினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 5,225,000 தொகையானது 6 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் 2019 ஆகஸ்ட் 16 இல் 472461 ஆம் இலக்க காசோலையின் கீழ் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு செலுத்தப்பட்டுள்ளது. எனவே, நிர்மாணக் குறைபாடுகள் மற்றும் குறைபாடுகளுக்காக ஒப்பந்ததாரரிடமிருந்து அறவீடு செய்யும் திறனை அமைச்சு இழந்திருந்தது. | 2017 திசெம்பரில் வீடமைப்பு செயற்திட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு 2018 சனவரியில் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஊ) | இந்த வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பாக 2022 பெப்ரவரி 23 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 2018 சனவரி மாதம் பூர்த்தி செய்யப்பட்ட 55 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்ட போதிலும் 03 வீடுகளின் பயனாளிகள் இதுவரை குடியிருக்காததுடன் ஏழு வீடுகளில் பல்வேறு வெடிப்புக்களும் விரிசல்களும் காணப்பட்டன. | வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், தோட்ட வீடமைப்பு சங்கங்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய காலத்திற்குள் உரிய தரத்துடன் வீடுகளை பூர்த்தி செய்து பயனாளிகளுக்கு அவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | **பின்தங்கிய பகுதிகளில் சமூக பொருளாதார வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டம்** இச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ஹட்டன், நுவரெலியா, கண்டி, கேகாலை மற்றும் காலி ஆகிய 05 பிராந்தியங்களில் 64 உட்கட்டமைப்பு செயற்திட்டங்களுக்காக ரூபா 96,018,835 தொகை மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு செயற்திட்டத்தை மாத்திரம் பூர்த்தி செய்வதற்கான கிரயம் ரூபா 35,059,488 ஆகும். அதன் பிரகாரம் 36.5 சதவீதமான நிதி முன்னேற்றம் மாத்திரமே அடைந்துகொள்ளப்பட்டிருந்ததுடன் போதியளவு பௌதீக முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையின் தாக்கம் காரணமாக, மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் மூலப்பொருட்களின் விலையில் விரைவான அதிகரிப்பு ஆகியவை மதிப்பிடப்பட்ட விலையில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில் சிரமத்தை ஏற்படுத்தியது. கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் மோசமான வானிலை காரணமாக சில செயற்திட்டப் பகுதிகள் பூட்டப்பட்டிருப்பதால் செயற்திட்டங்களின் நிர்மாணம் தாமதமாகியிருந்தது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது தொடர்பான செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்பதையும், சில செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். | செயற்திட்டங்கள் உரிய காலத்திற்குள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | **கௌரவிலா வீடு ஏ மற்றும் பீ செயற்திட்டத்தின் பௌதீக பரீட்சிப்பு** வீடுகளை நிர்மாணிப்பதற்காக அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் ஒரு வீட்டின் பெறுமதியில் ரூபா 4,94,000 தொகை 4% வட்டி விகிதத்தில் கடன் அடிப்படையில் உள்ளதுடன் ரூபா 506,000 மிகுதித் தொகை அமைச்சினால் ஏற்கப்படுகிறது. மேற்படி கடன் தொகை ஒவ்வொன்றும் ரூபா 3,800 வீதம் 180 மாதாந்த தவணைகளில் அறவிடப்பட வேண்டும். ஆனால் 2022 மார்ச் 01 அளவில் கௌரவிலா வீடு ஏ மற்றும் பீ செயற்திட்டத்தின் இரண்டு பகுதிகளிலிருந்தும் கடன் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டள்ளது. வீடமைப்புக் கடன்களை அறவிடுவது தொடர்பில் வீட்டுப் பயனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கடன்களை அறவிடுமாறு பெருந்தோட்ட சமூக தொடர்பாடலின் உத்தியோகத்தர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வீடமைப்பு செயற்திட்டங்கள் தொடர்பான கடன்களை அறவிடுதல் தொடர்பான தகவல்களை உரிய தோட்ட கம்பனிகள் மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு ஆகியவற்றிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | கடன் மற்றும் வட்டி அறவீடு தொடர்பாக முறையான பதிவேடுகள் அமைச்சில் பேணப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க கடன் மற்றும் வட்டி அறவிடப்பட வேண்டும். |
| (ஐ) | கௌரவிலா வீடுகள் பீ செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக ரூபா 1,615,000 கூட்டுமொத்த நிறுத்திவைத்தல் பணம் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் 2021 ஒக்தோபர் 12 இல் தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு கடிதத்தில் 02 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், அந்த வீடுகள் அமைந்துள்ள தரைப்பகுதி மண்சரிவுகள் காரணமாக சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய NBRO அறிக்கைகளின் பிரகாரமும் திட்டத்தின் பிரகாரமும் காணியின் அளவு மற்றும் அதன் நிலைமைக்கு ஏற்ப காணியில் வீட்டுத் திட்டத்தை முன்வைக்காததால் அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காததால் குடியிருப்பாளர்களுக்கு சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது. | இணங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வீடமைப்பு செயற்திட்டங்களைத் திட்டமிடுவதில் இவ்வாறான பலவீனங்களைத் தவிர்ப்பதற்காக நான் ஒரு குறிப்பை மேற்கொண்டுள்ளேன். | முறையான தரத்துடன் வீடுகளை பூர்த்தி செய்து பயனாளிகளுக்கு அவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | 2019 திசெம்பரில் வீடுகளின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், வீட்டு நிர்மாணப் பணியுடன் சேர்த்து உட்கட்டமைப்பு செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்படாததால், தண்ணீர், மின்சாரம், அணுகும் வீதிகள் இல்லாததால் வீடுகள் குடியிருக்கப்படாமல் இருந்தன. | இணங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வீடமைப்பு செயற்திட்டங்களைத் திட்டமிடுவதில் இவ்வாறான பலவீனங்களைத் தவிர்ப்பதற்காக நான் ஒரு குறிப்பை மேற்கொண்டுள்ளேன். | வீடமைப்பு செயற்திட்டங்களைத் திட்டமிடுவதில் நிர்மாணத்துடன் சேர்த்து உட்கட்டமைப்பு செயற்திட்டமும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஓ) | கௌரவில வீடு ஏ செயற்திட்டத்தின் பயனாளிகளுக்கு 23 வீடுகள் கையளிக்கப்பட்டன, அதில் ரூபா 19,000,000 பெறுமதியான 19 வீடுகளின் பயனாளிகள் வசிக்க முன்வரவில்லை.<br>2019 திசெம்பரில் வீடுகளின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், 2021 திசெம்பர் 16 இல் பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டன. | பயனாளிகள் உரிய தோட்ட சங்கம் மூலம் குடியிருத்தப்பட வேண்டும். | செயற்திட்டங்கள் உரிய காலத்திற்குள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும். |
| (ஔ) | 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையி தோட்ட வீட்டு நிர்மாண செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டலின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்கனவே உள்ள வரிசை வீடுகள் அல்லது தற்காலிக கொட்டகைகளை கையகப்படுத்தும் உடன்படிக்கையின் அடிப்படையில் புதிய வீடுகளை கையளிப்பது மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கும் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கும் அத்தகைய முறை பயன்படுத்தப்படவில்லை.<br><br>கருவிளை வீட்டுத்திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 23 வீடுகளில் 19 பயனாளிகளுக்கு தீர்வு வழங்கப்படாமலும், பழைய வீடுகள் அகற்றப்படாத காரணத்தினால் பழைய வரிசை வீடுகளையும் அகற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், அந்த நிலத்தை வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | குறித்த கால எல்லைக்குள் செயற்திட்டங்கள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளிடம் அவற்றை கையளித்து அவர்கள் தற்போது வசிக்கும் காணிகளை கையகப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | பயனாளிகள் தொடர்பாக, வீடமைப்பு செயற்திட்டங்களுக்கான வழிகாட்டல்களின் பிரகாரம் வீடமைப்பு செயற்திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் தோட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஊழியராக இருப்பது கட்டாயமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் கௌரவில ஏ வீடமைப்பு செயற்திட்டத்தில், அமைச்சின் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள வீடுகளை வைத்திருக்கும் பயனாளிகளின் தகவல்கள் உள்ளடங்கிய பட்டியலில் ஊழியர் சேமலாப நிதிய இலக்கம் இல்லாத 03 பயனாளிகள் இருந்தனர். | இணங்கப்பட்டுள்ளது. கோவையில் உள்ள வீட்டு உரிமையாளர் பயனாளிகள் பட்டியலில் மூன்று பயனாளிகள் உள்ளடங்கியிருப்பதும் ஊழியர் சேமலாப நிதிய இலக்கம் இல்லாதமையும் அவதானிக்கப்பட்டதுடன், இது குறித்து விசாரித்த பின்னர் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு கடிதம் அனுப்பப்பட்டது. உரிய தகவல்கள் கிடைத்தவுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | செயற்திட்டம் தொடர்பான அனைத்து விபரங்களும் கோவைகளில் சேர்க்கப்பட வேண்டும். |
| (கா) | **கெல்லியா வீடமைப்பு செயற்திட்டம் கட்டப்பட்ட வீடுகள் பயன்படுத்தப்படாமை**<br>கெல்லியா பிரிவில், 2019 சனவரி 10 இல் பணிகள் தொடங்கப்பட்டு 2019 ஒக்தோபர் 15 இல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 29,060,000 தொகையான 30 வீட்டு அலகுகளில் 20 வீடுகளின் பயனாளிகள் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ரவரி 23 அளவில் வசிக்க முன்வரவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்ட செலவினங்களில் ரூபா 19,373,334 தொகைக்கான நலன்கள் பொதுமக்களால் பெறப்பட்டிருக்காததுடன் சொத்துக்கள் விளைவற்றிருந்தன. அமைச்சினால் எவ்வித மேற்பார்வையும் அல்லது நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது. | பயனாளிகள் குடியிருக்காதமை தொடர்பில், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு மற்றும் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பவர் ஆகியவற்றின் அதிகாரிகளிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | குறித்த கால எல்லைக்குள் செயற்திட்டங்கள் அதிகபட்ச வினைத்திறனுடன் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளிடம் அவற்றை கையளித்து அவர்கள் தற்போது வசிக்கும் காணிகளை கையகப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (கி) | **செயற்திட்ட கண்காணிப்பு சிக்கல்கள்**<br>பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பவர்களாக அமைச்சினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட கடமைப் பட்டியலின் விடய இல. 01 இன் கீழ், தற்போது நடைபெற்று வரும் வீடமைப்பு செயற்திட்டங்களின் களப்பணிகளை கண்காணித்தல், தகவல்களை | இணங்கப்பட்டள்ளது. அமைச்சின் திட்டமிடல் பிரிவானது தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பவரின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவர்களின் கடமைகள் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். | தகவல் முறையாக தெரிவிக்கப்பட்டு அதற்கிணங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேகரித்தல், ஆய்வு செய்தல், நிர்மாண வேலைகளை பரீட்சித்தல், கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை செய்தல் என்பன காணப்படுகின்றது. சமர்ப்பிப்பு சரியான நேரத்தில் செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட வீடுகளில் பயனாளிகள் குடியிருக்கவில்லை என அமைச்சுக்குரிய அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. | | |
| (கீ) | **வீடமைப்பு செயற்திட்டத் திட்டமிடலில் உள்ள பலவீனங்கள்.** வீடுகளை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட தேயிலை தோட்டங்கள் மிகவும் கடினமான பிரதேசங்களில் அமைந்துள்ளன. அந்த இடங்களைச் சென்றடையும் வகையில், ஒவ்வொரு வீட்டிற்கும் பிரதான வீதி மற்றும் பக்க வீதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் வீடமைப்பு செயற்திட்டங்களின் மிக அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படும் தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து வழங்குதல் ஆகியன வீடமைப்பு செயற்திட்டங்களின் பகுதியாக உள்ளடங்குகிறதுடன் ஒதுக்கீடுகள் வீடமைப்பு செயற்திட்டத்துடன் இணையான வழியில் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனை திட்டமிட்டு செயற்படுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு திட்டமிடப்படாமல் வீடமைப்பு செயற்திட்டம் நிறைவடைந்த பின்னர் வீதி, நீர் வசதி மற்றும் மின்சார வசதி போன்ற வேறு செயற்திட்டங்களை வகுத்தமையினால், வீடுகளின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் சம்பந்தப்பட்ட பயனாளிகள் வீடுகளில் குடியேறுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. | இணங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வீடமைப்பு செயற்திட்டங்களைத் திட்டமிடுவதில் இவ்வாறான பலவீனங்களைத் தவிர்ப்பதற்காக நான் ஒரு குறிப்பை மேற்கொண்டுள்ளேன். | வீடமைப்பு செயற்திட்டங்களைத் திட்டமிடும்போது, நிர்மாணத்துடன் சேர்த்து உட்கட்டமைப்பு செயற்திட்டங்களையும் செய்ய வேண்டும். |
| (கு) | வழிகாட்டல்களின் பிரகாரம் ஒரு வீட்டிற்கு 07 பேர்ச்கள் ஒதுக்கப்பட வேண்டும், ஆனால் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில், அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு அளவை திட்டம் தயாரிக்கப்பட்டது, | இணங்கப்பட்டுள்ளது. வீடமைப்பு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இத்தகைய பலவீனங்களைத் தவிர்ப்பதற்காக நான் ஒரு குறிப்பை மேற்கொண்டுள்ளேன். | வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஆனால் பௌதீக பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 30 வீடுகள் தொடர்பாக, பல இடங்களில் எல்லை தூண்கள் காணப்படவில்லை. வழங்கப்பட்ட 07 பேர்ச்களுக்கு அப்பால் பயனாளிகள் காணிகளை ஆக்கிரமித்துள்ளனர். சில பகுதிகளில் மண் அரிப்பு காரணமாக மண்சரிவு அபாயம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | எடுக்கப்பட வேண்டும் |

**3.9 பெறுகை**

------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்படாமை**<br>பெறுகை வழிகாட்டல்களின் 3.9.4 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபா 2 மில்லியனுக்கும் அதிகமான ஒப்பந்தங்கள் வழங்கப்படக்கூடாததுடன் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட மொத்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை மூன்றுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். ஆனால், பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பால் மேற்கொள்ளப்பட்ட இந்த செயற்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்தங்களுக்காக ரூபா 28,500,000 தொகை 30 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கிணங்க அவை பெறுகை வழிகாட்டுட்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்கு அப்பால் செயற்பட்டன. | இணங்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.10 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 150 புதிய வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பாக தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கு முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 570,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், போர்டைஸ் தோட்டத்தில் 19 வீட்டு | ஏற்றுக்கொள்ளப்பட்டது. தோட்ட கம்பனிகளிடமிருந்து காணி விடுவிப்பு, NBRO அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நாட்டில் ஏற்பட்ட கடுமையான கொரோனா தொற்று நிலைமை காரணமாக, அடிப்படை நடவடிக்கைகளை | உரிய கால எல்லைக்குள் அதிகபட்ச வினைத்திறனுடன் செயற்திட்டங்களை பூர்த்தி செய்து பயனாளிகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | அலகுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் மீளாய்வாண்டில் 2020 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பணி தொடங்குவதற்கு முன்பணமாக ரூபா 27,840,000 தொகை செலுத்தப்பட்டது, ஆனால் எந்த செயற்திட்டமும் எதிர்பார்த்த அளவை அடைந்திருக்கவில்லை. | எதிர்பார்த்தவாறு மேற்கொள்வதில் தடை ஏற்பட்டது. கட்டிட மூலப்பொருட்களின் துரித விலையேற்றம் மற்றும் மூலப்பொருட்கள் தட்டுப்பாடு போன்ற காரணங்களால், செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமாகி வருவதால், செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட முடியாமல் தோல்வியடைந்திருந்தன. உரிய செயற்திட்டங்களுக்கான நிர்மாணப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். | வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.11 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில், 07 வலயங்களில் உள்ள 55 தோட்டங்களை உள்ளடக்கி, ரூபா 292,025,000 பெறுமதியான 1159 வீட்டு அலகுகள் அமைச்சினால் கடன் அடிப்படையில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் 307 வீட்டு அலகுகளுக்காக பெறவேண்டிய ரூபா 82,550,000 தொகையில் 2021 திசெம்பர் 31 இல் பெறவேண்டிய தொகை எதுவும் இன்னும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. அமைச்சு ஒதுக்கீடுகள் மூலம் நிர்மாணிக்கப்படும் தோட்ட வீடுகள் கடன் அடிப்படையிலும், இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீட்டுத்திட்டங்கள் முழு மானிய அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு செயற்திட்டங்களும் ஒரே தோட்டத்தில் செயற்படும் போது, பயனாளிகளிடமிருந்து கடனை அறவிடுவது ஒரு பிரச்சனையாகவே உள்ளது. | அமைச்சிற்குள் கடன்கள் மற்றும் வட்டியை அறவிடுதல் தொடர்பாக முறையான பதிவேடுகள் பேணப்பட்டு அதற்கிணங்க கடன்களும் வட்டியும் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 பெப்ரவரி 15 ஆம் திகதிய SMEHCI/05/05/40 ஆம் இலக்க கடிதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புதிய வாழ்க்கை வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் அமைச்சால் அறவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 83,203,372 அதாவது மொத்த கடன் தொகையில் 28.49% ஆக குறைவாக இருந்தது. | கடனை அறவிடுவது தொடர்பில் வீட்டுப் பயனாளிகளுக்கு அறிவிக்குமாறு பெருந்தோட்ட சமூகத் தொடர்பாடல் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், செயற்திட்டங்களுடன் தொடர்புடைய கடன் அறவீடு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரிய தோட்ட கம்பனிகளுக்கும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | அமைச்சிற்குள் கடன்கள் மற்றும் வட்டியை அறவிடுதல் தொடர்பாக முறையான பதிவேடுகள் பேணப்பட்டு அதற்கிணங்க கடன்களும் வட்டியும் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதன் பிரகாரம் உரிய தகவல்கள் கிடைத்து வருகின்றன. கடன் அறவீட்டை முறைமைப்படுத்தவும் மேலும் தகவல்களைக் கொண்டு வரவும் நான் குறிப்பொன்றை மேற்கொண்டுள்ளேன். | |
| (இ) | **2018 இல் தொடங்கப்பட்ட பசுமை தங்க வீடமைப்பு செயற்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு.** 2018 ஆம் ஆண்டில் மட்டும் ஆரம்பிக்கப்பட்ட பசுமை தங்க வீடமைப்பு செயற்திட்டத்தில் 07 வலயங்களுக்கு உட்பட்ட 83 தோட்டங்களுக்கு 1,657 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டது. இந்த அனைத்து வீடுகளுக்கும் ரூபா 1,657,000,000 வழங்கப்பட்டது. 2017 பெப்ரவரி 21 ஆம் திகதிய AMA/17/0306/739/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 861,640,000 கடனாகவும், ரூபா 795,000,000 உள்ளுர் உதவியின் கீழ் இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது, ஆனால் முழு கிரயத்தையும் உள்ளுர் நிதியின் கீழ் செலுத்த வேண்டும் என்றும், நிர்மாணத்தின் பின்னர், சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கப்படும் என்றும், பின்னர் கடனை தவணை முறையில் அறவிட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அறவிடப்படாததால், உள்ளுர் நிதிக்கான மொத்த கிரயமான ரூபா 1,657,000,000 தொகை செலவினமொன்றாக உள்ளதுடன் இந்த வீடுகளின் நிர்மாணத்த்தின் மேற்பார்வைக்காக, ஒரு வீட்டின் நிர்மாணக் கிரயமானது 7 சதவீத முகாமைத்துவ கட்டணத்துடன் ரூபா 950,000 ஆக உள்ளதுடன் ரூபா 110,190,500 (950,000* 7%*1657) தொகை தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்த வேண்டியிருந்தது. இதுவும் உள்ளுர் நிதிக்கு பெரும் செலவாக உள்ளது, மேலும் இந்த செயற்திட்டங்களில் பெரும்பாலானவை மிகவும் கடினமான காணியில் கட்டப்பட்டிருப்பதால், தண்ணீர் | இணங்கப்பட்டது. எதிர்காலத்தில் வீடமைப்பு செயற்திட்டங்களைத் திட்டமிடுவதில் இத்தகைய பலவீனங்களை தவிர்ப்பதற்காக நான் குறித்துக்கொண்டுள்ளேன் கடனை அறவிடுவது தொடர்பில் வீட்டுப் பயனாளிகளுக்கு அறிவிக்குமாறு பெருந்தோட்ட சமூகத் தொடர்பாடல் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், செயற்திட்டங்களுடன் தொடர்புடைய கடன் அறவீடு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உரிய தோட்ட கம்பனிகளுக்கும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பிற்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | செயற்திட்ட அமுல்ப்படுத்தலின் செயற்திறன் மற்றும் வினைத்திறனில் அரசாங்க நிதியை உரிய கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும். அதற்காக 83 வீடமைப்பு செயற்திட்டங்களுக்கு ரூபா 415,000,000 (5,000,000 * 83) ஒதுக்கப்பட வேண்டும், மேலும் செலவினம் உள்ளூர் நிதியிலும் சுமையாக இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. இந்த வீடமைப்பு செயற்திட்டங்களுக்கு பயனாளிகளிடம் கட்டணம் அறவிடப்படுகிறது உள்ளூர் நிதியாக ரூபா 2,182,190,500 தாங்கிக்கொள்ளப்பட வேண்டியிருத்தல் மற்றும் திறைசேரியும் அதே கிரயத்தை தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதால் இச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதன் செயற்திறன் கேள்விக்குரியதாக உள்ளது. | | |
| (ஈ) | கொள்வனவு செய்யப்பட்ட 50 தையல் இயந்திரங்கள் சுயதொழில் செய்பவர்களுக்கு வழங்கப்பட்டதா, அப்படியானால், சுயதொழில் செய்பவர்கள் அவற்றை ஏற்றுக்கொண்டார்களா, எந்த அடிப்படையில் சுயதொழில் செய்பவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள் என்பது குறித்து தகவல் எதுவும் காணப்படாததுடன் அமைச்சு எந்தவொரு தொடர் நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அல்லது அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்ட தையல் இயந்திரங்கள் பற்றிய தகவல்கள் எதனையும் அமைச்சு கொண்டிருக்கவில்லை. | சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பரிந்துரையின் பேரில் இந்த தையல் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன் பயனாளிகளின் பட்டியல் கோவையில் இணைக்கப்பட்டுள்ளது. | பெறுகை கோவையில் தொடர்புடைய தகவல்கள் உள்ளிடப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |
| (உ) | இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் பிரகாரம் ”செயற்திட்டத்தின் நோக்கம் 49,000 வீடுகளை நிர்மாணிப்பதும் கடுமையான மற்றும் பகுதியளவு சேதமடைந்த வீடுகளின் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்புக்கு உதவுவதும் ஆகும்” ஆனால் அந்த நோக்கத்திற்கு முரணாக ரூபா 2,491,650 பெறுமதியான 15 மேசைக் கணனிகள் அமைச்சிற்காக கொள்வனவு செய்யப்பட்டன. | இந்த மேசைக் கணனிகள் முக்கியமாக பொறியியல் துறைக்காக கொள்வனவு செய்யப்பட்டதால், சம்பந்தப்பட்ட செலவின வாக்குப்பணத்தின் நிர்வாகச் செலவினங்களின் கீழ் இந்தகொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | விசேட செயற்திட்டங்களின் நிதி சம்பந்தப்பட்ட செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | **தோட்டத் துறையில் சுயதொழில் செயற்திட்டத்திற்காக பேணப்பட்ட சுழற்சி நிதி**<br>2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 11,082,224 ஆக உள்ளதுடன் மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியை உறுதிப்படுத்தும் ஆவணம் இலங்கை வங்கியிலிருந்து கொண்டு வரப்பட்டு உடனடியாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை உடனடியாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2187/27 ஆம் இலக்க விசேட வர்த்தமானியின் பிரகாரம், தோட்டத் துறையின் சுயதொழில் செயற்திட்டத்திற்காக பேணப்படும் சுழற்சி நிதியானது தனியான நிறுவனமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட போதிலும் இது அமைச்சின் அபிவிருத்தி துறையின் நிகழ்ச்சித்திட்டமொன்றாக பேணப்படுகிறதால் நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நியதிச்சட்ட மற்றும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியங்களுக்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து செயலாற்றல் அறிக்கைகள் தொடர்புடைய கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினால் இனங்காணப்பட்ட நான்கு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் கீழ், எட்டு இலக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன்,மிளாய்வாண்டின் இறுதியளவில் 05 நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி செய்தல் மட்டமானது, 3.4 சதவீதத்திலிருந்து 56 சதவீத ஆகக்குறைந்த மட்டத்தில் உள்ளது. | மீளாய்வாண்டின் இறுதியில், வரிசை அறைகளின் கூரைகளிற்கு பயன்படுத்தப்படும் துத்தநாக அலுமினிய (Zn, Al) தகடுகளின் பற்றாக்குறை காரணமாக, இக்காலப்பகுதியில் 1000 பாழடைந்த வரிசை அறைகளுக்கு மீள்கூரை அமைப்பதற்கான செயற்திட்டத்தின் முன்னேற்றம் 3.4% ஆன குறைந்த மட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. அதிக கிரயம் காரணமாக இச் செயற்திட்டத்தை நிறைவேற்ற மாற்றுப் பொருளாக asbestos ஐ பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்ட போதிலும், தற்போதுள்ள வரிசை அறைகளின் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு, அதிகபட்ச வினைத்திறனுடன் செயற்படுவதற்கும், விரும்பிய வெளியீட்டு அளவை அதிகபட்சமாக அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சுவர்கள் வலுவாக இல்லாததால் அந்தத் தெரிவை நடைமுறைப்படுத்த முடியவில்லை என பொறியியலாளர்கள் தெரிவித்தனர். ஏனெனில் கொவிட்டின் மரபணு நிலை காரணமாக திட்டமிட்டவாறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைச் அமுல்ப்படுத்த முடியவில்லை.

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021.12.31 இல் உள்ளவாறு 08 சிரேஷ்ட நிலைப் பதவிகள் மற்றும் 06 மூன்றாம் நிலைப் பதவிகள் உட்பட 39 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. 02 பணிப்பாளர் பதவிகள், 08 பணிப்பாளர் (பொறியியல்), பொறியியலாளர், உதவி/ பிரதிப் பணிப்பாளர், கணக்காளர், உள்ளக கணக்காய்வாளர் மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 08 சிரேஷ்ட நிலை பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன. | வெற்றிடங்களின் எண்ணிக்கை சரியாக உள்ளது. நிறைவேற்று நிலை பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | அத்தியாவசிய பதவிகளில் உள்ள வெற்றிடங்களை பூர்த்தி செய்து அமைச்சின் பணிகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல். |
| (ஆ) | 35 இரண்டாம் நிலைப் பதவிகள் மற்றும் 03 ஆரம்ப நிலைப் பதவிகள் உள்ளடங்கலாக 38 பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை விட கூடுதலாக இருந்தன. இரண்டாம் நிலையில் உள்ள மேலதிக பதவிகள் அனைத்தும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் ஆகும், இது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் (இரண்டாம் நிலை) 284 சதவீதத்திற்கும் அதிகமாகும். மேலும் இந்த தேவையற்ற அபிவிருத்தி | இந்த அமைச்சுக்கு 2021.01.01 இலிருந்து 173 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், 2021.04.01 இலிருந்து 173 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டனர். பொது சேவைகள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் செயலாளரின் 2021.03.26 ஆம் திகதிய CS/DOS/Policy/01/01(II) ஆம் இலக்க கடிதத்தின் 1 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்தான பதவிகளுக்கான அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 35 புதிய பதவிகள் அந்த | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணிநீக்கம் இல்லாமல் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் அரசாங்க நிதிகள் வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூபா 1,102,000 (மொத்த சம்பளமாக) மேலதிக செலவினத்தை செய்ய வேண்டியிருந்தது. | உத்தியோகத்தர்களை வேறு பதவிகளுக்கு இடமாற்றம் செய்ததன் காரணமாக தேவையற்றது. அந்த 35 மேலதிக நபர்களை இந்த அமைச்சிற்கு இணைக்கும் பொருட்டு 2021.12.31 ஆம் திகதிய SMEHCI/2/3/3/2 (2021-பதவிகளை உருவாக்குதல்) ஆம் இலக்க கடிதம் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 70 இற்கு கீழ் உள்ள பதவிகளின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. |